**வத்தளை மாபோல நகர சபை**
**கம்பஹா மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 18 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வத்தளை மாபோல நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | டெக்ரர், டேலர் மற்றும் கம்பெக்டர் வாகனங்களின் கடன் தவணைக்காக ரூபா 5,688,750 தொகை முத்திரை வருமானங்களில் இருந்து கழிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,880,000 தொகை 2020 ஆம் ஆண்டின் முத்திரை வருமானம் ஆனமையால் அந்த வருமானத்திலிருந்து கடன் கழிக்கப்பட்டும் மற்றும் வருமானம் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற வருமானங்கள் மாத்திரம் கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் கிடைத்த காசோலை 2019 ஆம் ஆண்டிற்காக கிடைத்த வருமானம் ஆனமையால் கடனிலிருந்து கழிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | நிதிகூற்றுக்களில் பௌதீக இருப்பு மீதியை கணக்கீடு செய்வதற்கு பதிலாக ரூபா 2,755,642 தொகையான பேரேட்டு மீதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பௌதீக மீதியை கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 இன் இறுதி கணக்கில் சரி செய்யப்படுமென அறியத்தருகின்றோம். |
| (இ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க | மொத்த வருமானமும் | நிறுத்தி வைத்தல் பணம், காகிதாதிகள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய மூலதன உதவித் தொகை ரூபா 15,573,484 ஆக இருந்த போதிலும், அது ரூபா 12,060,208 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யப்பட வேண்டும். | முத்தரைக் கட்டணம் போன்ற சகல கிடைக்க வேண்டிய மீதிகளும் கடன் பட்டோரிலிருந்து அகற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஈ) | 2016 திசெம்பர் 20 ஆம் திகதி தீர்க்கப்பட்டிருந்த ரூபா 247,617 தொகை முற்கொடுப்பனவு கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான மீதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2016 இல் தீர்க்கப்பட்ட மீதியொன்று உள்ளடக்கப்பட்டிருந்ததை அறியத்தருகின்றோம். |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 கணக்கு விடயங்களில் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிக்கும் உபயோகப் பதிவேடுகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 459,960 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்குகளில் சரி செய்வதற்கும் கணக்குகளை சரி செய்வதற்காகவும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஒக்தோபர் முதல் 2019 செப்தெம்பர் 30 வரையான காலத்தில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக செலுத்த வேண்டிய ரூபா 16,196,170 தொகை கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அதனை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்வதற்கும் தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2017 ஆம் முதல் கட்டணங்கள் செலுத்தாதிருந்த போதிலும், கைவிடப்படவில்லை என அறியத்தருகின்றோம். |

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 99,186,552 கூட்டுத் தொகையான 02 கணக்கு விடயங்களுக்காக 2019 திசெம்பர் | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற தகவல்கள் | கணக்குகளை சரி செய்வதற்காக உள்ளூராட்சி |

| | | | |
|---|---|---|---|
| | 31 இல் உள்ளவாறான விரிவான பட்டோலை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 103(1) மற்றும் 104(1) | முன்னாள் களஞ்சிய உத்தியோகத்தரினால் 2019 ஆகஸ்ட் 07 ஆம் திகதி அங்கீகாரமின்றி களஞ்சியசாலை பொருட்களில் ஒரு அளவு எடுத்துச் செல்லப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டமை தொடர்பாக ஆரம்ப விசாரணையொன்று நடாத்தி பொறுப்பு வாய்ந்த நபர் மற்றும் அளவுகள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பு வாய்ந்தவரை நிர்ணயிப்பதற்காக பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். | ஆரம்ப விசாரணைகளுக்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 நவம்பர் 09 ஆம் திகதிய எல்ஈடீ/13/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை. | மாபோல மீன் கடை 2019 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் 2024 சனவரி 31 வரை 05 வருடங்களுக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் ஹெந்தல சந்தை தொகுதியின் கடையொன்று 2014 திசெம்பர் 17 ஆம் திகதி முதல் கடையினை உடைத்து அகற்றும் வரை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கை செய்யப்பட்ட குறித்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டும். | உடன்படிக்கை காலத்தை நீடிப்பதற்கும், உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 45,215,921 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 43,238,320 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 56,365 | 56,510 | 54.277 | 37,991 | 56,065 | 56,198 | 46,935 | 40,944 |
| (ii) | வாடகை | 14.663 | 12,004 | 17,550 | 9,398 | 14,600 | 11,467 | 15,357 | 10,076 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 770 | 1,189 | 1,234 | - | 400 | 835 | 872 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 93,580 | - | 42,073 | - | 82,878 | 85,277 | 85,277 | - |
| | | 165,378 | 69,703 | 115,134 | 47,389 | 153,943 | 153,777 | 148,441 | 51,020 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஆதன வரி** | | |
| (i) கொழும்பு, நீர்கொழும்பு பிரதான வீதியில் ஹெந்தல சந்தி முதல் நீர்கொழும்பு திசையில் உள்ள 672 ஆம் இலக்க ஆதன வரி ஆதனத்திற்காக 2019 ஆம் ஆண்டில் எவ்வித ஆதன வரியும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வியாபார நிலையமொன்றாக ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | காணியொன்றாக பதியப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ii) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 03 | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க | 2020 ஆண்டில் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களுக்கு மேற்பட்ட அறவிட வேண்டிய ஆதன வரி மீதி ரூபா 21,617,184 ஆகும். | வேண்டும். | |

(ஆ) **வியாபார வரி**

| | | | |
|---|---|---|---|
| | வியாபார வரி ஆரம்ப நிலுவை மீதி ரூபா 1,472,327 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வரிப் பதிவேடுகளை பரீட்சித்து நிலுவையை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

**2.2.3 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 21 கடைகளில் வாடகை உடன்படிக்கையின்றி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு அல்லது கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 42 கடைகளுக்கான உடன்படிக்கை 2007 மற்றும் 2018 ஆண்டுகளுக்கு இடையிலான காலப்பகுதியில் முடிவடைந்திருந்ததுடன் மீண்டும் அந்த உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கோவிட் நிலைமையினால் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு வழங்கப்பட்டுள்ள காலம் நீடிக்கப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். |
| (இ) | புகையிரத நிலைய வீதி ஹெந்தல, வத்தளை, மாபோல சந்தைகளில் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 92 கடைகளில் நிலுவைக் கடை வாடகை ரூபா 6,219,529 ஆக இருந்ததுடன், 2020 யூன் 11 ஆம் திகதி வரையில் ரூபா 210,635 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

### 2.2..4 அனுமதிப்பத்திர கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாதணிகளை உற்பத்தி செய்யும் கைத்தொழில்சாலைகளை உள்ளடக்கிய சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய 21 நிலையங்களுக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப் பத்திரத்தை பெறாத நிறுவனத்திற்காக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிபந்தனைகளை சரி செய்வதற்காக நியாயமான காலமொன்று வழங்கப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். |

### 2.2..5 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறு 254 நிறுவனங்கள் கழிவுப் பொருட்களை அகற்றும் கட்டணம் 15 - 54 மாதங்களுக்கு இடையிலான கால வீச்சில் ரூபா 5,898,415 தொகை நிலுவையாக காணப்பட்ட போதிலும் அந்த நிறுவனங்களின் கழிவுப் பொருட்களை அகற்றுதல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிட முடியாதுள்ள கழிவுப் பொருள் கட்டணங்களை சட்ட ரீதியாக அறவிடுவதற் நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட இலத்திரனியல் உள்ளுராட்சி முறைமையை ஏற்படுத்துதல் என்ற தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றல் திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். | புதிதாக இணையதளமொன்று நிர்மாணிக்கப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 79 பேர்ச் காணியை விற்பதற்கும் சபைக்குரிய காணி கட்டிடங்களை வாடகைக்கு வழங்குதல் தொடர்பாகவும் 2019 நவம்பர் 07 ஆம் திகதி நடாத்தப்பட்ட அரசாங்க கணக்குகள் தொடர்பான விஷேட செயற்குழு கூட்டத்தின் கட்டளையின் பிரகாரம் கம்பஹா மாவட்டத்தில் கமநல சேவைகள் ஆணையாளரிடமிருந்து இந்த காணி வெற்றுக் காணியாக இருந்ததற்குரிய பரிந்துரை இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க கணக்குகள் தொடர்பான விஷேட செயற்குழு கூட்டத்தின் போதான கட்டளைகள் அமுல்படுத்தப்பட வேண்டும். | உள்ளூராட்சி செயலாளரின் மூலம் கமநல சேவை ஆணையாளரின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 2019 நவம்பர் 07 ஆம் திகதி நடாத்தப்பட்ட அரசாங்க கணக்குகள் தொடர்பான விஷேட செயற்குழு கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்ட நகர சபைக்கு சொந்தமான 79 பேர்ச் காணியில் ஏனைய நிறுவனத்திற்குரிய காணிக்கு அடுத்தாலுள்ள காணியில் கட்டிடமொன்றை நிர்மாணித்திருந்தமை தொடர்பாக அந்த கட்டிடத்திலிருந்து காணியை வேறு பிரித்து உரிய பிரகாரம் வேலி எல்லையினை இட்டு சபைக்கு சொந்தமானது என்பதை காண்பிக்கும் பிரகாரம் பெயர் பலகையொன்றை இடுதல், அதில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தை அகற்றுதல் மற்றும் பொருத்தப்பட்டிருந்த இயந்திர பொறிமுறைகளை அகற்றி சபையின் சரியான உரித்தை பெற்றுக் கொள்வதற்கு | அரசாங்க கணக்குகள் தொடர்பான விஷேட செயற்குழு கூட்டத்தின் போதான கட்டளைகள் அமுல்படுத்தப்பட வேண்டும். | தீர்த்து வைத்து சரியான உரித்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | ஓய்வுபெற்றுச் சென்ற மற்றும் இடம் மாற்றலாகிச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய உத்தியோகபூர்வ வீட்டு வாடகை ரூபா 69,399 அறவிடப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகபூர்வ வீட்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உத்தியோகபூர்வ வீட்டு வாடகை மற்றும் நிலுவை என்பவற்றை அறவிடுவதற்காக அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வத்தளை மாபோல பிரதேசத்தில் வீதிகளை சேதப்படுத்துவதற்காக 55 சந்தர்ப்பங்களுக்குரியதாக ரூபா 222,590 தொகை அறவிடப்பட்டிருந்த போதும், அந்த பழுது திருத்தங்களுக்காக சபை ஊழியர்களை பயன்படுத்தாமல் ஒப்பந்த காரருக்கு கையளித்து ரூபா 851,034 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சேர்க்கப்பட்ட வீதி தொழிலாளர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட வேண்டும். | பழுதடைந்த வீதிகளை தயாரிப்பதற்கு மேலதிகமாக ஏனைய வேலைப் பகுதியும் மேவுகை செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2012 மே 10 ஆம் திகதிய உள்ளுராட்சி மற்றும் மாகாண சபைகள் மேலதிக செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் உள்ளுராட்சி நிறுவனங்களின் வாடகை பணம் திருத்துதல் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ஹெந்தலை சந்தைத் தொகுதியில் கடைகள் இறுதியாக 2008 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த மதிப்பீடு 2019 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருந்தது. கட்டியாவத்தை, மாபோல புகையிர நிலைய வீதி மற்றும் வத்தளை | வாடகைப் பணத்தை திருத்துதல் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்பட வேண்டும். | 2008 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீடு இது வரையும் அமுல்படுத்தப்படாமையினால் அதன் கீழ் உடன்படிக்கை நாளது வரையாக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | சந்தைத் தொகுதிகளில் அமைந்துள்ள கடைகள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | புகையிர நிலைய வீதியில் கடையொன்று 2013 யூலை 30 ஆம் திகதிய சபைத் தீர்மானத்தின் பிரகாரம் 05 வருடங்களுக்கு வாடகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2013 ஆகஸ்ட் 07 ஆம் திகதி முதல் 15 வருடங்களுக்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், இந்த கடையிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 141,693 ஆக காணப்பட்டது. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், நீண்ட காலமாக வாடகைக்கு வழங்கல் மேற்கொள்ள முடியாதிருந்தது. | உடன்படிக்கையின் குறைபாடுகளை கண்டறிந்து எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஈ) | பாலஹேனவத்தை, ஹெவத் கெட்டகேலஹவத்தை காணி, மாபோல கிராமத்தில் அமைந்துள்ள பொதுச் சந்தைக் காணி, ஹெந்தல சந்தியில் அமைந்துள்ள கஹட்டகஹ வயல் காணி, ஹாவத்தலை ஹெந்தல சந்தியில் அமைந்துள்ள பொதுச் சந்தை நிலத்தின் காணி என்பன 30 வருட காலத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இறுதியில் மேலும் 20 வருடங்களுக்கு வாடகைக்கு வழங்குவதற்கு உடன்படிக்கை செய்யக் கூடிய வகையில் வாடகை உடன்படிக்கைகளில் ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. மேலும், கேள்வி நடைமுறைகளை பின்பற்றி வாடகைக்கு வழங்கப்பட்டமை வெளிப்படுத்தப்படாதிருந்தது | சபைக்கு நலன் பெறக்கூடிய வகையில் உடன்படிக்கைகளில் உள்ளக்கப்பட வேண்டும். | காணி 1986/6 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | டன், 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்து வாடகைப் பணத்தை திருத்த வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான நிபந்தனையொன்று வாடகை உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | 02 சந்தர்ப்பங்களுக்கு உரியதாக காணி வாடகைக்கு வழங்கும் போது வாடகை உடன்படிக்கையில் 05 வருடங்களுக்கு ஒரு தடவை வாடகைப் பணம் திருத்தப்பட வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | வாடகை உடன்படிக்கைகளில் 05 வருடங்களுக்கு ஒரு தடவை வாடகைப் பணத்தை திருத்தும் வகையில் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து தகவல்களைப் பெற்று கூடிய விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

**3.4 பெறுகைகள்**

**3.4.1 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுதுவெல்ல வீதி, பொருத்திக்கல் வழங்கி பதிப்பதற்காக தனியார் ஒப்பந்தகாரர் நிறுவனத்திற்கு ரூபா 963,841 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும், 2019 நவம்பர் 27 ஆம் திகதிய பௌதீக அளவிடையின் பிரகாரம் 10.69 சதுர மீற்றருக்காக ரூபா 33,502 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | சரியான அளவீட்டுக்காக கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | இந்த வீதியின் பலதரப்பட்டதாக இருந்தமையால் அளவீட்டின் போது சில இடங்களில் எடுக்கப்பட்ட அளவில் கணிப்பிடப்படடிருந்தது. என்பதை அறியத்தருகின்றோம். |